# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு2029 மாசி 24 ஞாயிற்றுக்கிழமை (08-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்:86


01 MAR 1998

# கிளாலிக் கடலில் மீண்டும் மோதல்!

## கடற்படையினர் காயம்

கொழும்பு, மார்ச் 8

**கிளாலிக் கடல் நீரேரிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக "புலிகளின் குரல்" வானொலி நேற்று அறிவித்தது.**

கடந்த இருவாரங்களின் முன்னர் விடுதலைப் புலிகளின் சிறுத்தைக் கடற் புலிகளினால் தாக்குதல் நடத்தப்பட்டஅதேஇடத்திலேயே மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இத் தாக்குதலில் ஐந்து கடற்படையினர் காயமடைந்துள்ளதாகவும் அந்த வானொலி மேலும் அறிவித்தது.

அதே சமயம் கிளாலிக் கடல் நீரேரிப் பகுதியில் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தவிடுதலைப்புலிகளின் ஐந்து படகுகளை ராடர்கள் மூலம் அவதானித்த கடற்படையினர் அப்படகுகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் |

சிறிது நேரம் இடம்பெற்ற இச்சண்டையில் ஆறு படையினர் காயமடைந்து பலாலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் களப்பலி என தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 8

நேற்று முன்தினம் வெற்றி உறுதிப் படையினருடன் ஏற்பட்டமோதலில் காயமடைந்திருந்த போராளி ஒருவர் நேற்று மரணமானார்.

நந்தன் (லோகேந்திரன் தவலிங்கம் — யாழ்ப்பாணம்) என்பவரே மரணமானதாகப் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

அதே சமயம் நேற்று மதியம் 11 மணியளவில் கற்கிடங்குப் பகுதியில் படையினருடனான மோதலில் நாவேந்தன் (எட்வேட்ரவீந்திரன்ராஜேந்திரம் டொனால்ட் — யாழ்ப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுகளைக் கண்டு பிடிக்கும் நவீன உபகரணங்கள் கொள்வனவு

## பாதுகாப்புச் சபை கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மார்ச் 8

வாகன, மனிதகுண்டுகளைக் கண்டுபிடிக்கக் கூடிய ஸ்கானிங் முறையிலான நவீன உபகரணங்களை உடனடியாகக் கொள்வனவு செய்ய பாதுகாப்புச்சபை தீர்மானம் எடுத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மருதானை குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் குண்டு வெடிப்புத் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குண்டுகளைக் கண்டு பிடிக்கும் இத்தகைய நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்ய அதிக நிதி தேவைப்படும். ஆனால் நாட்டின் பாதுகாப்புக் கருதி இவற்றை கொள்வனவு செய்ய வேண்டி உள்ளது என ஜனாதிபதி பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் தெரிவித்தார். (இ-21)

## ரோர்ச்லைற் குண்டு!

வவுனியா, மார்ச் 8

மட்டக்களப்பில் உள்ள புளொட் அமைப்பாளரின் முகாமுக்கு அருகில் கிடந்த ரோச்லைற் ஒன்றை எடுத்து இயக்கிப் பார்க்க முற்பட்ட இளைஞர் ஒருவர் அது வெடித்ததில் தனது கையை இழந்தார்.

நடராஜா ரஜனிக்காந் (வயது 20) என்ற இளைஞரே கையை இழந்தவர் ஆவார். (இ-21-164-9)

# முல்லைத்தீவுக் கடலில் வள்ளங்கள் தீக்கிரை!

## 2மீனவர் கரை திரும்பவில்லை

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதியில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இரு வள்ளங்கள் கடற் பரப்பில் வைத்து தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. அந்த வள்ளங்களில் சென்ற இரு மீனவர்களும் இன்னும் கரைசேரவில்லை.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில் கள்ளப்பாடு கடற்பரப்பில் இடம்பெற்றது.

அதே சமயம் நேற்று முன்தினம் இரவு 12 மணி முதல் அதிகாலை மூன்று மணிவரையும் காலை 7 மணி முதல் 9.30 மணிவரையும் முல்லைத்தீவுக் கடற்பரப்பு கடற்படையினரின் கடுந் தாக்குதலுக்கு உள்ளானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-164-9)

# அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தொலைபேசி இணைப்புப்பெற முயற்சி

## படையினர் தரப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

"தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சட்டத்துக்கு முரணான வகையில் ரெலிக்கொம் மற்றும் பாதுகாப்பு இணைப்பு அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்"

இப்படி யாழ், பாதுகாப்பு கட்டளைப் பணிப்பதிகாரி தெரிவித்துள்ளார் என்று யாழ். பாதுகாப்பு தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்பட்டு தொலைபேசி வசதிகளை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்புக்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்த அனைவருக்கும் ஒரே சமயத்தில் இணைப்புகளை வழங்குவதற்கு தேவையான அளவு உபகரணங்கள் இல்லாத காரணத்தினாலேயே அனைவருக்கும் ஒரே சமயத்தில் இணைப்புக்களை வழங்க முடியாதுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இறந்தோர் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்தது

## 10பேரின் நிலைகவலைக்கிடம்

கொழும்பு; மார்ச் 8

கடந்த வியாழன் மருதானை ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை காயமடைந்து தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 69 பேரில் 10 பேரின் நிலை நேற்றுமாலை வரை கவலைக்கிடமாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-9-7)

# புலிகள் ஆட்டிலறி தாக்கு!

வவுனியா, மார்ச் 8

வன்னி வெற்றி உறுதி பிரதேசத்திலுள்ள இராணுவ நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் மற்றும் ஆட்லறி தாக்குதல்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

கடந்த இரு நாள்களில் இடம்பெற்ற இத் தாக்குதல்களில் இராணுவ வீரர்கள் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (இ-21)

# ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கை!

சென்னை, மார்ச் 8

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சதி சம்பந்தமான அம்சத்தை ஆராய்ந்த ஜெயின் கமிஷன் நேற்று தனது இறுதி அறிக்கையை அரசிடம் கையளித்தது.

கமிஷனின் செயலாளர் டி. ஆர். ருத்ரா இந்த அறிக்கையை சீல் வைக்கப்பட்ட உறையில் இட்டு உள்துறைச் செயலர் வி. பி. சிங்கிடம் ஒப்படைத்தார்.

இந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் குறித்து எந்த விதமான தகவல்களையும் அவர் வெளியிடவில்லை.

தனது பதவிக் காலத்தை நீடிக்குமாறு ஜெயின் கமிஷன் கேட்டுக்கொண்டதை அரசாங்கம் நிராகரித்ததும்—

ஒருவார காலத்தினுள் அறிக்கையை சமர்பிக்குமாறு அரசு கோரியிருந்ததும் — தெரிந்தவையே. (இ-9)

# கிளைமோர் தாக்குதலில் இறந்தோர் 9 படையினர்

## காயமடைந்தோர் 6 பேர்

கொழும்பு, மார்ச் 8

வவுனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளம் நெடுங்கேணி வீதியில் மதிய மடுவுக்கும் நயினா மடுவுக்கும் இடையில் விடுதலைப் புலிகளின் கிளைமோர் வெடியில் சிக்கி 18 படையினருடன் வந்த உழவு இயந்திரமொன்று சேதமடைந்தது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் 9 கடற்படையினர் உயிரிழந்ததுடன் ஆறு படையினர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் 5 இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாகவும் முன்னர் செய்தி வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-9-164)



அப்ப தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் எண்டு சொல்லுங்கோ...!

# தெலுங்குதேச ஆதரவு எந்தக்கட்சிக்கும் இல்லை

## சந்திரபாபு நாயுடு அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 8

"இந்தியாவில் தற்பொழுது அரசு அமைக்கும் பலப் பரீட்சையில் தெலுங்கு தேசக் கட்சி காங்கிரஸ் பக்கமும் இல்லை. பாரதீய ஜனதாக் கட்சியின் பக்கமும் இல்லை.

மேற்கண்டவாறு தெலுங்குதேசம் கட்சியின் தலைவரும், ஐக்கிய முன்னணியின் அமைப்பாளருமான சந்திரபாபு நாயுடு நேற்று பகிரங்கமாக அறிவித்தார்.

மத்தியில் அரசமைப்பது தொடர்பாக முன்னணிக் கட்சிகளிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் ... நம் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திடீர் மின் தடையால்

# விமான நிலையம் இருளில் மூழ்கியது!

கொழும்பு, மார்ச் 8

கடந்த புதன்கிழமை இரவு 9.00 மணியளவில் மின் விநியோகம் திடீரென தடைப்பட்டதால் கொழும்பு சர்வதேச விமான நிலையம் சுமார் 20 நிமிடங்கங் இருளில் மூழ்கியது.

மின்விநியோகம் திடீரெனத் தடைப்பட்டதால் தாமாக இயங்கும் மின் பிறப்பாக்கிகளும் அன்று செயற்பட மறுத்ததால் விமான ஓடுபாதை, கட்டடத்தொகுதி ஆகியன முற்றாக இருளில் மூழ்கின.

சுமார் 20 நிமிடங்களின் பின்னர் மின்பிறப்பாக்கிகளை செயற்படவைத்து மின்சாரம் பெறப்பட்டது எனவும் ஆனால் பிரதான மின்விநியோகம் மீண்டும் இரவு 10.30 மணிக்கே சீரானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மின்விநியோகம் தடைப்பட்டிருந்த அந்த 20 நிமிடங்களில் விமான நிலையத்திலிருந்து வெளியே செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. அதேபோல் விமான நிலையத்திற்குள் செல்லவும் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

(ஐ-10)

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ சி. வ. கந்தசாமி

**ஆச்சாரியார்**

(பண்டித சித்த வைத்தியமணி – இந்தியா)
(டிப்ளோமா இன் ஹோமியோபதி – சென்னை)

மீனாட்சி அம்மன் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவஸ்ரீ சி. வ. கந்தசாமி ஆச்சாரியார் 06–03–98 வெள்ளிக்கிழமை மன்னாரில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08–03–98 ஞாயிற்றுக்கிழமை இல. 101, கற்குழி, வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
வ. கிருஷ்ணசாமி (சகோதரன்)
தி. சூரியகுமார் (மருமகன்)

ஸ்ரீதேவி வைத்தியசாலை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(53922)

### செல்லையா யோண்

(A. O. இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா யோண் 07 – 03 – 98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - யோட்சியானா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சான்டோ செல்லையா மறாயா அவர்களின் அன்பு மருமகனும் மற்றும் சவுந்தரமணியின் அன்புக் கணவரும், றீற்றா, சுறேபி, சோபேஸ் (டோகா) ஆகியோரது அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி எம்மிலி ராசேந்திரம் மற்றும் குணரட்ணம் (முன்னாள் P. O. சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), திருமதி கெலன் மரியநாயகம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சவுந்தரநாயகம், பேரின்பநாயகம், எஸ்தர், திருமதி ராணி சுரேந்திரன் (சூரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
எஸ்தர் (மைத்துனி)

கல்லூரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

(53919)

### நாகநாதி கருணானந்தன்

(உரிமையாளர், கமலா ரேடர்ஸ், கிளிநொச்சி)

சரவணை கிழக்கு, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடலை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கிளிநொச்சி கமலா ரேடர்ஸ் உரிமையாளர் நாகநாதி கருணானந்தன் 5–3–98அன்று காலமானார்.

அன்னார் நாகநாதியினதும், காலஞ்சென்ற இராசம்மாவினதும் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி, மீனாட்சி ஆகியோரின் அருமை மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், துஷியந்தி, துவாரகன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்)ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (வட்டக்கச்சி), பத்மநாதன் (உரிமையாளர், சாரதா கூல்பார், கிளிநொச்சி), அன்னபூரணி (வட்டக்கச்சி), பரமானந்தசிவம் (டாக்டர், ஓமான்), வரதராஜன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசேஸ்வரி, வடிவாம்பிகை, கங்கைவேணியன், (உரிமையாளர், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்), சந்திரவதனி, கணேசமூர்த்தி, சாரதாம்பாள், பத்மநாதன், கமலா, மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8–3–98) ஞாயிறு காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.கங்கைவேணியன்
(மைத்துனர்)
(வேணி களஞ்சியம்,
யாழ்ப்பாணம்.)

106, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(53923)

## சமய நிகழ்வில்

தென் புலோலி ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய வேட்டைத் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தில் அம்பிகை எழுந்தருளி பல வீதிகளின் ஊடாக வராத்துப்பளை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்துக்குச் செல்லவிருக்கின்றார்.

## இன்று

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் நடத்தும் சர்வதேச மகளிர் தினமும் விசேட பொதுக் கூட்டமும் இன்று 8 ஆம் திகதி காலை 10.00 மணியளவில் செல்வி வே. சீதா தலைமையில் பருத்தித்துறை சத்துணவுக் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலகத்திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி ந. புவனேஸ்வரி பிரதம உரையாளராகவும், வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் க. அன்னபாக்கியம், கால்நடை வைத்திய அதிகாரி திருமதி த. புனிதவதி, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பொ. பரமேஸ்வரி ஆகியோர் சிறப்பு உரையாளர்களாகவும் பங்குபற்றவுள்ளனர்.

(இ-5)


### வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள் வலிப்புநோய், பீனிசம்,, தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை,
வைத்திய கலாநிதி,
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(53793)

### லிபேட்டி சினிமா

அச்சுவேலி.
35 அடி அகலத் திரையில்

இன்று முதல்
ரகுமான் - லட்சுமி
அப்பாஸ் நடித்த
**சின்னத் தளபதி**
(புதிய வெளியீடு)
குடும்பச் சித்திரம்

பழைய நேரம்
10–30, 2–30

(53782)

### நெல்லியடி மஹாத்மா

வெண் திரையில்
கமல் - மீனா
நடித்த
**ஔவை சண்முகி**
09 - 03 - 98 முதல்
அர்ஜுன் - ரோஜா
நடித்த
**ஆயுத பூஜை**
10-30, 2-30
(பழைய நேரம்)

(சி/2756)


## அனைத்துலக பெண்கள் தினம்-1998

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு நடத்தும் அனைத்துலக பெண்கள்தின நிகழ்ச்சிகள் 08 - 03 - 98 ஞாயிறு காலை 10 மணிக்கு

**யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.**

*முக்கிய நிகழ்வுகள்*

01. சிறப்புரைகள்.
02. அனைத்துலக பெண்கள் தின போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கல்.
03. மனையியல் அடிப்படை பயிற்சி நெறியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கல்.
04. அதிர்ஷ்டலாபச்சீட்டின் அதிர்ஷ்டம் பார்த்தல்.
05. கலை நிகழ்ச்சிகள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவட்ட மகளிர் குழு,
யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை,

[சி/3061]

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை
திருமதி க. தம்பிநாதன்
அவர்களின் தந்தையார்

### அமரர் சி. கணபதிப்பிள்ளை

அவர்கள் 05 – 03 – 98 இல் சிவபதம் எய்தியதையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்.

யா/ஆவரங்கால்
நடராஜ ராமலிங்க வித்தியாலயம்.

(53916)

## கண்ணீர் அஞ்சலி

எமது மாணவி
செல்வி இ. ராதிகா அவர்களின்
அன்புத் தந்தையார்

### ம. இராஜேந்திரா

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஆண்டு 10 மாணவர்கள்.

யா / ஆவரங்கால் நடராஜ இராமலிங்க
வித்தியாலயம், புத்தூர்.

(53915)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### நாகநாதி கருணானந்தன்

(அத்தான்)

(உரிமையாளர்: கமலா ரேடர்ஸ், கிளிநொச்சி)

இவரது இழப்பால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள்,
வேணி களஞ்சியம்.

165, K. K. S. றோட்,
யாழ்ப்பாணம்.

(53924)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### நாகநாதி கருணானந்தன்

(அத்தான்)

(உரிமையாளர்: கமலா ரேடர்ஸ், கிளிநொச்சி)

இவரது இழப்பால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
அம்பாள் ரேடர்ஸ்.

324, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(53925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனங்களில் ஆட்சி புரிகிறோம்!

## ஜெயலலிதா பெருமிதம்



சென்னை, மார்ச் 8

ஆட்சிப் பொறுப்பில் நாங்கள் இல்லாவிடினும் மக்கள் மனங்களில் தொடர்ந்து ஆட்சி செய்து வருகின்றோம். பொதுத்தேர்தல் வெற்றி இதனையே எடுத்துக் காட்டுகிறது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மக்கள் அளித்த தீர்ப்பை அடக்கத்துடனும், பணிவுடனும் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன்.

கருத்துக் கணிப்புகள் என்பது எங்களைப் பிடிக்காத சிலர் நடத்தியது; கருணாநிதி தூண்டுதலால் சிலர் நடத்தியது; என்றாலும் ஆரம்பம் முதலே மக்கள் நமக்கு ஆதரவாக உள்ளார்கள் என்பதைக் கட்சித் தொண்டர்களுக்குத் தெரிவித்த வண்ணம் நானிருந்தேன்.

இன்று மக்கள் ஆதரவு காட்டி இருக்கிறார்கள்; அன்பு பாராட்டி இருக்கிறார்கள்; அமோக வெற்றி அளித்து உள்ளார்கள். மக்கள் நம்மோடு இருக்கிறார்கள் என்ற என் எண்ணம் மிகவும் தெள்ளத் தெளிவாக உலகம் புரிந்து கொள்ளும் வாய்ப்பேற்பட்டது எண்ணி மகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

என் மீதும் இயக்கத்தின் மீதும் பேரன்பு வைத்துள்ள மக்களுக்கு என் நன்றிப் பெருக்கைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நானும், நான் தலைமை தாங்கி நடத்தும் இயக்கமும் என்றென்றும் இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஐ)

# எங்கள் மாபெரும் வெற்றி ஜெயலலிதாவையே சாரும்!

## ராமதாஸ் கூறுகிறார்

தேர்தலில் நாம் பெற்ற மாபெரும் வெற்றி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் அன்புச் சகோதரி ஜெயலலிதாவையே சாரும்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ப. இராமதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த திங்களன்று அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அ.தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் வியத்தகு வெற்றியைப் பெற்றுள்ளது. கருத்துக்கணிப்புகள் போன்ற மாயாஜாலங்களைப் பொது மக்கள் உதாசீனப்படுத்தியுள்ளனர். கருத்துக் கணிப்புகள் அனைத்தும் தூள் தூளாகி விட்டன.

தமிழக மக்கள் ஜெயலலிதா மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதனையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து தி.மு.க. தலைவர் உடனடியாக பதவி விலகி சட்டப்பேரவைத் தேர்தலைச் சந்திக்க வேண்டும். விரைவில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தமிழக முதல்வராவார் என்பதற்கு அச்சாரமாகவே தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. எங்கள் கூட்டணியை வெற்றி பெறச் செய்த தமிழக மக்களுக்கு இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (ஐ)

# பாரதீய ஜனதா ஆட்சி அமைப்பதை வலியச் சென்று தடுக்கக்கூடாது!

## கர்நாடக முதல்வர் பட்டேல் கருத்து

பெங்களூர், மார்ச் 8

மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசு அமைக்கப்படுவதை வலியச்சென்று தடுக்கக்கூடாது என்பதில் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் பலரிடையே ஒருமித்த கருத்து நிலவுகிறது. பிரச்சினைகளுடன் கூடிய ஆதரவையாவது ஐக்கிய முன்னணி பாரதீய ஜனதாவுக்கு அளிக்க வேண்டும்.

ஜனதா தள் கட்சியின் தலைவர்களில் ஒருவரும் கர்நாடக மாநில முதலமைச்சருமான ஜே. எச். பட்டேல் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தேர்தலில் அதிக இடங்களைப் பெற்றுள்ள பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியை சட்டப்படியும், அரசமைப்பின் படியும் அரசு அமைக்க ஜனாதிபதி அழைக்க வேண்டும் என்பதை தாம் ஆதரிப்பதாகவும் பட்டேல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணியின் சார்பில் அல்ல; ஜனதாதள் தொண்டன் என்ற முறையிலும் ஜனதா தள் ஆட்சி புரியும் மாநிலத்தின் முதலமைச்சர் என்ற வகையிலுமே தாம் இக் கருத்துக்களைக் கூறுவதாகவும் முதல்வர் பட்டேல் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தமிழகத்திலிருந்து 21 புதிய முகங்கள்

சென்னை, மார்ச் 8

நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் இருந்து 21 பேர் முதன் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வட சென்னைத் தொகுதியில் வெற்றியீட்டிய தி.மு.க. வேட்பாளர் சி. கே. குப்புசாமியை (வயது 70) தவிர புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனையோர் அ.தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்தவர்களாவர்.

இந்தியச் செய்திகள்

அவர்களின் விவரம் வருமாறு:-

அ. தி. மு. க.

கே. வேணுகோபால் (ஸ்ரீபெரும்புதூர்), பி. ராஜரத்தினம்(பெரம்பலூர்), ராஜா பரமசிவம் (புதுக்கோட்டை,, எஸ்.முருகேசன்(தென்காசி), நடிகர் ராமராஜன் (திருச்செந்தூர்), வி. சத்தியமூர்த்தி(ராமநாதபுரம்), சி. கோபால் (அரக்கோணம்), டாக்டர் வி. சரோஜா (ராசிபுரம்), கே. பழனிச்சாமி (திருச்செங்கோடு), வி.கே. சின்னசாமி (கோபி செட்டி பாளையம்), எம். தியாகராஜன் (பொள்ளாச்சி).

ம. தி. மு. க.

வை.கோ.(சிவகாசி) இவர் ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினராக இருந்துள்ளார்), எ. கணேசமூர்த்தி (பழனி), செஞ்சி ராமச்சந்திரன்(திண்டிவனம்).

பா.ம.க.

தலித் எழில்மலை (சிதம்பரம்), கே. பாரிமோகன் (தர்மபுரி), என். டி. சண்முகம்(வேலூர்), எம். துரை (வந்தவாசி).

பா. ஜ. க

கி. பி. ராதாகிருஸ்ணன் (கோவை), மாஸ்டர் மாதன் (நீலகிரி).

(ஐ)

# மக்களின் அதிருப்தியே தி. மு. கவின் தோல்வி!

## வீரமணி கூறுகிறார்

சென்னை, மார்ச் 8

தமிழக ஆளுங்கட்சியான தி. மு. க. மீது மக்களிடம் உள்ள அதிருப்தியே தி.மு.க. கூட்டணியின் தோல்விக்கு மூல காரணம் என்று திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு, நிலைவரம், கோவை குண்டு வெடிப்புக்கு முன்பும் கூட மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி, சாதிக் கலவரங்கள் போன்றவை தோல்விக்கான காரணங்களாகும்.

விலைவாசி ஏற்றம், பஸ் கட்டண உயர்வு மக்களிடையே முன்பு தாராளமாக இருந்த பணப்புழக்கம் இப்போது இல்லாத நிலை போன்றவையும் தோல்விக்கான காரணங்களாகும். ஜெயலலிதா மீதும் அவரது கட்சியினர் மீதும் வழக்குகள் போட்டு சிறையிலேயே நிரந்தரமாகத் தள்ளி விடுவோம் என்ற பேச்சுக்கள் ஊழல், ஊழல் என்ற குரல் புளித்துப் போய் எதிர்விளைவையே உண்டாக்கியது. ரஜினி சொன்னால் அதன்படி மக்கள் வாக்களிப்பர் என்று கருதி அளவுக்கு அதிகமாக அவருக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது மதிப்பைப் பின்னுக்குத் தள்ளியதும் ஒரு காரணம் — என்று அவர் தெரிவித்தார்.

(ஐ)

# கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஒன்றிணைந்து சமாசம் அமைப்பு

அரியாலை, மார்ச் 8

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக்கூட்டுறவு சங்கங்களின் கிராமிய வங்கிகள் ஒன்றிணைந்து கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்றை அமைத்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 25 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 30 கிராமிய வங்கிகள் தற்போது இயங்கி வருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் கிராமிய வங்கிகளினூடாக கடன் அடிப்படையில் பணத்தைப் பெறும் முயற்சியாகவே கிராமிய வங்கிகள் ஒன்றிணைந்து இந்த சமாசம் ஒன்றை அமைத்துள்ளன.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தால் நடைமுறைப் படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தினால் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் உதவியுடன் கடன் பெறமுடியும்.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்த கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவராக யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏழு பேர் கொண்ட நெறியாளர் குழுவும் தெரிவாகியது.

இந்த சமாசம் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து செயற்படும். (ஐ-17)

# மகளிர் தின கருத்தரங்கு

நெடுந்தீவு, மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு ஐக்கிய தீப மகளிர் கழகம் மகளிர் தினக் கருத்தரங்கை இன்று நடத்துகிறது.

செல்வி நா. சரஸ்வதி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் ''தொழில் புரியும் பெண்களும் சுமைகளும்'' என்னும் பொருளில் புலவர் அ. வெ. அரியநாயகம் கருத்துரை வழங்குவார்.

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் கருத்தரங்கு நடைபெறும்.

(ஐ-111)

# செல்வா நூற்றாண்டு விழா சிரமதான நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவையொட்டி புளொட் அமைப்பினர் சிரமதானப் பணிகளையும், இரத்ததானப் பணிகளையும் ஒழுங்கு செய்துள்ளனர்.

சிரமதானப் பணிகளின் முதற்கட்டமாகப் பாடசாலை மைதானங்கள் சிரமதானப் பணிகள் மூலம் சீர் செய்யப்பட்டு வருகின்றன. கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தான முன்றலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

அதேசமயம் [illegible] டுப் போட்டிகள் நடைபெறும் சில பாடசாலைகளுக்கு வெற்றிக்கேடயங்களும், பரிசுப் பொருள்களும் இலவசமாக வழங்கப்பட உள்ளதாகவும், புளொட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


புளொட் அமைப்பின் செயலதிபர் க. உமாமகேஸ்வரன், தந்தை செல்வா, வெ. யோகேஸ்வரன், தியாகி சிவகுமாரன் ஆகியோரின் நினைவாகவே வெற்றிக் கேடயங்களும்பரிசுப்பொருள்களும் வழங்கப்பட உள்ள [illegible]

(இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கா நினைவுடன்
## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 13 — 04 — 1942



உதிர்வு: 01 — 03 — 1996

அமரர்

### சபாபதி இரத்தினசிங்கம்

(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம், சிமெந்து அடைப்பு நிலைய பொருத்துநர், சைலோ கவனிப்பாளர், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.)

திதி:- 08—03—1998

ஆருயிர்த் தெய்வமே! அன்பின் அப்பாவே! கல்வியே கண், ஒழுக்கமே உயிரினும் மேலானது என நிதமும் கூறி எம்மை வளர்த்து வழிகாட்டிய அப்பாவே! உங்கள் சொற்படி உங்கள் ஆத்மாவின் ஆசியுடன் நாம் வாழ்வோம். அதுவே உங்கள் ஆத்மாவிற்கு சாந்தி அளிக்கும். நீங்கள் எம்மை விட்டுச் சென்று ஆண்டு இரண்டு ஆகிவிட்டது; ஆனால் ஆறவில்லை எம் வேதனை. உங்கள் ஆத்மா சாந்தி பெற மாவை முருகனை வேண்டுகிறோம்.

உங்கள் நினைவுகளோடு வாழும்:

குடும்பத்தினர்

கணேசபுரம்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(49983)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### சற்குணநாதன் சிவமகிபன்

உதித்தது: 02—10—1994
மறைந்தது: 08—09—1997

திதி: 04—03—1998

மூன்று வயதையே முழுமையாக முடிக்காமல்
முத்தியடைந்த மூத்த புதல்வனே!

அழகான ஆடை உடுத்திய உன் அழகுக்கோலத்தைப் பார்த்தாலே பசி தீருமடா! உனது எதிர் காலத்தை எண்ணிப் பூரிப்படைந்தோம். பரவசமானோம். ஆனால் விதி சதி செய்ததோ! சஸ்டி திதியில் முருகனோடு முத்தியடைந்தாய். உனது ஆத்மா சாந்தியடைவதாக. ஓம் சாந்தி!

உன் பிரிவைத் தாங்கமுடியாத
அப்பா, அம்மா, அப்பம்மா,
மற்றும் உற்றார், உறவினர்.

கொய்யாத்தோட்டம்,
இருபாலை கிழக்கு, கோப்பாய். (58877)

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழு சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நடத்தும் நிகழ்வுகள் இன்று ஞாயிறு காலை 10.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கூட்டுறவுஅபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்(கணக்காய்வு) திருமதி கோ.திருநாவுக்கரசு மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திச்சபை உதவி ஆணையாளர் கே. பரநிருபசிங்கம், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ. கனகசபாபதி, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் ஆகியோர் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

பெண்கள் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களின் பேச்சுக்கள் மற்றும் கூட்டுறவு மகளிர் குழுவினர் வழங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ஐ-7)

## வாரிவளவு நல்லியக்கச் சபை காரைநகர்

காரைநகர் மாணவர்களுக்கான
கல்வி ஊக்குவிப்பு

### பாராட்டலும் பரிசளிப்பும்


1998 – 04 – 19

01. க.பொ. த. (உயர்தரம்) 1995, 1996, 260 புள்ளிகளுக்கு மேல் பெற்று பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மாணவர்கள்.
02. க. பொ. த. (சாதாரணம்) 1995, 1996 எட்டுப் பாடங்களில் அல்லது ஏழு பாடங்களில் அதிவிசேட சித்தியுடன் (D) ஒரு பாடத்தில் திறமைச் சித்தி(C) பெற்ற மாணவர்கள்.
03. 1995, 1996, 1997 இல் ஆண்டு V புலமைப்பரிசில் பரீட்சையில் காரைநகர் பாடசாலைகள்தவிர்ந்த வேறு பாடசாலைகளிலிருந்து சித்தியடைந்த மாணவர்கள்.

மேற்படி பரிசில்களை பெறத் தகுதியுடைய காரைநகர் மாணவர்கள் அதிபரினால் உறுதிப்படுத்திய கடிதத்துடன் தங்கள் சுய விவரங்களையும் எதிர் வரும் 1998 – 03 – 25 –க்கு முன்னர் அனுப்பி வைக்கும் படி வேண்டப்படுகின்றீர்கள்.

ச. பத்மநாதன்,
செயலர்,
203/ 6, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
(53861)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
இராமுப்பிள்ளை சண்முகநாதன்
(உரிமையாளர், லக்ஷ்மி றேடர்ஸ்)
கொக்குவில் சந்தி

மலர்வு: 05— 07— 1943
உதிர்வு: 18— 02— 1997


திதி: 08— 03— 1998

ஓராண்டு சென்றதையா ஓயவில்லை நம் கவலை!
வாயார அப்பாவென்று அழைத்திடவே நீங்களில்லை
சீராக எமை வளர்த்துச் சீர் பலவும் செய்தீரே!
சடுதியிலே ஏனப்பா எமைவிட்டுப் பிரிந்தீர்?
தலைவனை இழந்து மனைவியிங்கு கலங்குகிறார்
தந்தையைப் பிரிந்து பிள்ளைகள்யாம்
தவிக்கின்றோம்
சகோதரனைப்பிரிந்துதுயர் ஆறாது தவல்கின்றோம்
மைத்துனனை இழந்து மைத்துனர்கள் இங்கு
அழுகின்றோம்
மாமாதனை இழந்து மருமக்கள் புலம்புகின்றோம்
மாநிலத்தில் இனியெப்போ நின்வதனம்
கண்டிடுவோம்.?

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள்,
மைத்துனர்கள்.

தாவடிவடக்கு,
கொக்குவில். (53838)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



(மன்னார் வலைப்பாட்டில் சங்கமமான)

| திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) | திருச்செல்வம் கம்சினி | சிவலிங்கம் திருச்செல்வம் |
|---|---|---|
| தோற்றம்:- 23 - 06 - 1974 | தோற்றம்:- 05 - 06 - 1996 | தோற்றம்:- 08 - 02 - 1972 |

மறைவு:- 19 - 02 - 1997
திதி:- 09 - 03 - 1998

அழகிய இளங்குருத்துக்களே! எங்கள் அன்பின் திருவிளக்கே!
உங்களை பாசமென்ற நெய்யூற்றிப் பகலிரவாய் வளர்த்திருத்தோம்
ஏற்றிவைத்த தீபங்களே! நீவிர் இடையினிலே அணைந்தீரோ!
இல்லறத்தில் நீர் இணைந்து மூன்று ஆண்டு ஆகவில்லை!
காலனவன் கடலினிலே கவர்ந்தானே உங்கள் உயிரை.
கல் மனதும் கலங்குமப்பா நீங்கள் இல்லாத உலகில் நிம்மதி ஏது?

நாளை (09 – 03 - 1998) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, அக்கா, அத்தான்,
மருமக்கள், அண்ணன்மார்— சிறீரங்கம், திருப்பதி.

தகவல்:–க. சிவலிங்கம்,
கதிரிப்பாய், அச்சுவேலி. (53768)

கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!
ஹோட்டல் சீவம்ஸ்
தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம்
ஹோட்டல் சீவம்ஸ் இன்றே விஜயம் செய்யுங்கள்!
கொழும்பில் தங்குவதற்கு மிகச்சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும்,
இரண்டுபேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம்.
இன்றே விஜயம் செய்யுங்கள் HOTEL SEIVAMS (GUEST HOUSE) No. 29A, SANGAMITHA MAWATHA, KOTAHENA, COLOMBO - 13.
T. P. No. 326522
(53906)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலையின்
# இளைப்பாறிய உபஅதிபர் செல்வி சரஸ்வதி பெரியதம்பி
# சேவைநலன் பாராட்டு மலர்

## ஆசிரியத் தொழிலுக்கு அணிகலனாக விளங்கியவர்

ஆசிரியை செல்வி சரஸ்வதி பெரியதம்பிக்கு இன்று சேவை நலன் பாராட்டு விழா நடைபெறுகிறது. வட்டுக்கோட்டைக் கல்வி சார் நிறுவனங்களின் மத்தியில் இவ்விழா மிக மிகக்கண்ணியமான விழாவாகும். வட்டு - திருஞானசம்பந்த வித்தியாசாலையை அணி செய்த உப அதிபர் இவ்வம்மையார் என்பதை நான் நன்கு அறிவேன். அடக்கமும், ஆளுமையும், கற்பித்தற் சிறப்பும் ஒன்றாக அமைந்த சிறப்பு அம்மையாரிடத்தில் உண்டு, கல்விக் கடமையை மிகமிகக் கண்ணியமாக நிறைவேற்றி இன்று ஆர்வலர் பலர் உள்ளத்திலே நிலையான இடத்தைப் பெற்று ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓய்வு பெறும் செல்வி பெரியதம்பியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒரு சில ஆசிரியர்களாவது பணிபுரிய முற்பட்டால் எமது கல்வி உலகு உன்னத நிலையில் வளர்ச்சி காணும் என்பதில். எதுவித ஐயமுமில்லை. எனவே ஓய்வுபெறும் நல்லாசிரியை செல்வி பெரியதம்பி அவர்களுக்கு எமது ஆசியும், பாராட்டும் உரித்தாகட்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி,
துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## கல்விக்கணி செய்த செல்வி

வட்டு—திருஞானசம்பந்த வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக முப்பதாண்டுகளின் மேல் தன்முழு நேரத்தையும் அர்ப்பணித்தவர். பாடசாலையின் சகலவள முன்னேற்றத்திற்காகவும் அரும்பாடுபட்டவர். அன்னார் நீடூழி வாழ வாழ்த்துகின்றேம்.

இந்துவாலிபர்சங்கம், வட்டுக்கோட்டை.

## ஒப்புயர்வற்ற பணியாளர்

செல்வி சரஸ்வதி பெரியதம்பி அவர்கட்கும் எங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவர் திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு ஆற்றியவர் ஆவார். அப்பாடசாலை வளர்ச்சியில் ஆர்வங் காட்டியவர். அவர் பணி ஒப்புயர்வற்ற பணியாகும். அவர் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

இந்து வாலிபர் சங்கம்,
சங்கரத்தை.

## வளமுடன் வாழ்க!

ஆசிரியர் என்றால் எவ்வாறான குணாம்சங்களைக் கொண்டவராக இருக்க வேண்டும் என யாராவது கேட்டால் செல்வி சரஸ்வதி பெரியதம்பியைப் போல் தான் இருக்க வேண்டும் எனக் கூறலாம். அவர் தமது பாடசாலைப் பணியை வெறும் கடமையாக மட்டும் கருதாமல் தமது வாழ்க்கையாகவே நினைத்து அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர்.

அவர் தமது ஓய்வு காலத்திலும் இப்பணியைத் தொடர்ந்து சகல வளங்களுடன் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



## செல்வி ச. பெரியதம்பி அவர்களின்

### சுய விவரச் சுருக்கம்

★ பிறந்த திகதி: 1938-01-10

★ கல்வி:

யா/ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை
(01-01-1942 — 31-12-1946)

யா/ சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை
(01-01-1947 — 31-12-1948)

யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை
(01-01-1949 — 31-12-1953)

★ சேவை விவரம்:

விவசாயக் கல்லூரி திருநெல்வேலி
(01-01-1957 — 31-12-1958)

யா/ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை
(01-02-1960 — 09-02-1971)

கோப்பாய் மகளிர் ஆசிரியகலாசாலையில் பயிற்சி
(10-02-1971 — 31-12-1972)

திருகோணமலை கல்வி மாவட்டத்தில் கல்விச்சேவை
(01-01-1973 — 14-06-1979)

யா/ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை
(15-06-1979 — 09-01-1998)

★ யா/ வட்டு.
திருஞானசம்பந்த வித்தியாசாலையில்...!

உதவி ஆசிரியர் (பயிற்சிக்கு முன்)
(01-02-1960 — 09-02-1971)

பயிற்சிக்குப் பின் (15-06-1979 — 31-12-1984)

ஆரம்ப பாடசாலை மேற்பார்வையாளர்
(01-01-1985 — 31-12-1992)

உப அதிபர் (01-01-1993 — 09-01-1998)

## கல்வி உலகின் ஒளி விளக்கு

செல்வி ச. பெரியதம்பி அவர்கள் தமது 30 வருட கால ஆசிரிய சேவையினை யா/ வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் ஆற்றி, இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியதுடன் இந்தப் பாடசாலையின் உப அதிபராக இருந்து அதிபருடைய நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய ஒரு நிர்வாகி ஆவார். அத்தோடு பல சமூக, சமய நிறுவனங்களிலிருந்து வட்டூர் மக்களின் உயர்வுக்காக அரும்பணியாற்றிய ஒருவராவார். இவர் தமது 60 வயதைப் பூர்த்தி செய்து இளைப்பாறினாலும் தொடர்ந்தும் கல்வியுலகிற்கு தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்க வேண்டுமென வேண்டி, அவரது பிற்கால வாழ்க்கை சிறக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏ. வி. கணேசலிங்கம்,
கோட்டக்கல்வி அதிகாரி,
சங்கானை.

## கடமையின் வடிவம்

எமது பாடசாலையின் ஆரம்பகலா மாணவர்களுள் ஒருவராக இருந்தும்பின்னர் இப்பாடசாலையின் ஆசிரியராகவு உப அதிபராகவும் சேவையாற்றி ஓய்வுபெறும் வேளையில் நாம் அவரை வாழ்த்தி வணங்குகின்றோம்.

எந்த விடயத்தையும் நிதானமாகவும், அமைதியாகவும் அணுகும் இயல்புடையவர். அடக்கத்துடன் பணி செய்பவர் எமது உப அதிபர். கடமையுணர்வு, அன்பு, தன்னலமற்ற சேவையுணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பதவிக்கடமைகளுக்கு மத்தியிலும் கற்பித்தலுக்கு முன்னின்ற பாங்கு இவையெல்லாம் எமது உப அதிபரிடம் இயல்பாயமைந்த இனிய தன்மைகள். இறைபக்தி மிகுந்த எமது ஆசிரியர் சமயக்கல்வியின் விருத்திக்கு உந்துசக்தியாக விளங்கி சக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஆக்கமும், ஊக்கமும் நல்கிய ஆசான் இப்பாடசாலையின் நீண்டகாலத் தொடர்பாளராக விளங்கியமையால் பாடசாலைச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தளநிலையில் இருந்து சிந்தித்து செயலாற்றும் அனுபவ முதிர்ச்சி மிக்கவர். சமூகப் பயன்பாடுகொண்ட பண்புகள் யாவும் ஒருங்கிணையப்பெற்ற ஆளுமை கொண்ட நிறைமனிதர்.

இவரது எதிர்கால வாழ்வு நோய்நொடியற்றதாகவும், மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்சள்.
வட்டு. திருஞானசம்பந்த
வித்தியாசாலை.

## வணங்கி வாழ்த்துவோம்

பகலிரவு நோக்காதிங்கு சேவை பல
ஜகத்தி லியற்றி, எம் 'சாலை' உயர
அக விருப்பொடு பணிபுரிந்த சரஸ்வதிப்பெரு
மகள்தம் பாதம் பணிந்தோம்; வணங்கி!

பழைய மாணவர் சங்கம்

## ★ செல்வி ச. பெரியதம்பியின் சேவையைப் போற்றி வாழ்த்துவோர் ★


ஆனந்தம் சிகை அலங்கார நிலையம்,
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

கண்ணன் களஞ்சியம்,
தபாற் கந்தோரடி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

சிவாஸ் ஸ்ருடியோ &வீடியோ,
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோட்டை.

சிவாஸ் ஸ்ருடியோ & வீடியோ
சித்தன்கேணி சந்தி,
சித்தன்கேணி.

வலம்புரி அழகுமாடம்,
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை,

சண்முகம் களஞ்சியம்,
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோடடை.

V.M.T மகேஸ் ஸ்ரோர்ஸ்,
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோட்டை.

பாலன் மில்,
மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை,

கஜலக்சுமி மில்,
சங்கரத்தை சந்தி,
வட்டுக்கோட்டை.

ஸ்ரீதுர்க்கா ஸ்ரோர்ஸ்,
மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை.

ஈசன் வீடியோ,
மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை.

சச்சியா ஹொட்வெயர்ஸ்,
தெல்லிப்பழைவீதி,
வட்டுக்கோட்டை.

முருகன் பேக்கவுஸ்,
துணவிச்சந்தி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

லெக்ஷ்மி பவான்
சைவ உணவகம்,
சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை.

கோபால் வீடியோநிலையம்
பிரதானவீதி,
வட்டுக்கோட்டை.

New Science Hall
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு முன்புறமாகவும் சிவன் கோயிலிற்கு அண்மையிலும் பிரதான வீதியில் அமைந்துள்ள மிதுனா அலங்கார வாணிபமும், ராஜா தையல் நிலையமும் அமைந்துள்ள இரண்டு கட்டடத் தொகுதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. பத்மநாதன், (வைத்தியர்) இரும்புமதவடி, வதிரி, கரவெட்டி. [53835]

நல்ல நிலையிலுள்ள தச்சு வேலைக்குரிய சீவல் மெசின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. சுவாமிநாதன். இல,497,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், [53888]

## தேவை

இரும்பு அலுமாரி, இரும்பு பைல் கபினற் தேவை. தொடர்பு: எஸ். சதாஸ், இல. 105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (53882)

## வாடகைக்கு

மாநகர சபை எல்லைக்குள் அலுவலகப் பாவனைக்குகந்த 2000 சதுர அடியில் அமைந்த கட்டடம் வாடகைக்கும், வீட்டுத் தளபாடங்கள், பாவனைப் பொருள்கள் விற்பனைக்கும் உண்டு. இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (53819)

## மணமகள் தேவை

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு (26 வயது, உத்திராடம் 3-ம்கால்) அழகிய நல்ல குணமுடைய மணமகள் தேவை. இல. 712, C/O உதயன் யாழ்ப்பாணம். (53853)

## மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1959 இல் பிறந்த, அச்சுவினி நட்சத்திரமுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு இல. 711, C/o உதயன், யாழ்ப்பாணம். (53852)

1964 ஆம் ஆண்டு 2 மாதம் 29-ம் திகதி நட்சத்திரம் உத்தரத்தில் பிறந்துள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் பெண்ணிற்கு மணமகன் தேவை. தொடர்பு: திருமதி குலேத்துங்கம், மூத்த விநாயகர் திருமண சேவை, NO. 09, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். (53881)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. (வாடிக்கையாளர்களுக்கு விசேடகழிவு உண்டு) தொடர்பு: No. 101, இலுப்பையடிச்சந்தி அருகில், பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [53894[

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [53886]

புறோயிலர் இறைச்சிக் கோழி சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு, கிலோ 140/- தொடர்பு; அருள் ஆச்சிரமம், இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [53909]

இறைச்சிக்கோழி (புறோயிலர்), நல்லின முட்டைகள் விற்பனைக்குண்டு. (குறிப்பு: சனி, ஞாயிறு காலை 11 மணி வரை) சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு. சுபநாதன், பொன்னையா வீதி, ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை. [53913]

இறைச்சிக் கோழி Broiler விற்பனைக்குண்டு. கிலோ 140/-. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (53884)

## தெளிவாகப் பார்க்க

ரி, வி, நிகழ்ச்சிகளை தெளிவாகப், பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப்பொருத்துவதற்கும் பூஸ்ரர்களைப் பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc.) Ceylon, Dip In Electronic, Engineering, London. 284, ஸ்ரான்லி வீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3068]

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் உள்ள கல் வீடு (வளவு 2 பரப்பு 16குழி) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல,713, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [53862]

எஸ். ரவீந்திரன் அவர்களுடைய 1½ பரப்புடன் கூடிய வீடு இல. 11 சோமசுந்தரம் அவன்யூ சுண்டுக்குளியில் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கு. லோகேந்திரம், 29, சோமசுந்தரம் அவன்யூ, சுண்டுக்குளி. (53911)

## தவறிவிட்டது

லோகேந்திரன் காண்டீபன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0902019843) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் புவிகா குளிர்சோலை, இல. 56, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும், [53899]

அ. அருள்நேசன் என்பவரது நிலஅளவைத்திணைக்கள ஆவணங்கள், திணைக்கள காசோலையும் மஞ்சள் நிற Bag உடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். நிலஅளவைத்திணைக்களம், 127/2, கோயில் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (I. C. R C. அலுவலகத்துக்கு அருகில்), [53807]

## கிளை திறப்பு

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதி உதவியைக்கொண்டு புனரமைப்புச் செய்யப்பட்ட பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பெரியவிளான் கிளையின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை யன்று நடைபெறவுள்ளது. (ஐ-135)

# ரஷ்யாவில் உயர்கல்வி

சர்வதேச அங்கீகாரமுடைய
பல்கலைக்கழகங்களில்
மருத்துவம், பொறியியல் மற்றும் ஏனைய துறைகளிலும் அனுமதி பெற்றுத்தரப்படும்.

98/99 விரிவுரைகள் ஓகஸ்ட் 1998 இல் தொடங்கும். அனுமதி பெற்றுத் தருவதற்கான கட்டணம் எதுவுமில்லை.

Dr. க. சிவனடியான்
நவாலி தெற்கு, மானிப்பாய்.
(53754)

உ
சிவமயம்

# உபநயன அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் மாசி மாதம் 25 ஆம் நாள் (09-03-98) திங்கட்கிழமை பூச நட்சத்திரமும், துவாதசி திதியும், சித்தயோகமும் கூடிய சுப நன்னாளில் முற்பகல் 10 மணி 25 நிமிடம் முதல் 11 மணி 25 நிமிடம் வரையிலான குருஹோரையும் கூடிய இடபலக்ன சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரர்கள்

| சிரஞ்ஜீவி | சிரஞ்ஜீவி |
|---|---|
| ப. ராதாகிருஷ்ண சர்மா | ப. கோபிகிருஷ்ண சர்மா |

அவர்களுக்கு

யக்ஞோபவீததாரண ப்ரும்மோபதேசஞ் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து செல்வர்கள் இருவரையும் ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்.

சிவஸ்ரீ ச. பரமேஸ்வரக்குருக்கள்
கௌரி தம்பதிகள்
அடுவம்பற்றுப் பிள்ளையார் கோயிலடி,

வரவேற்பாளர்கள்:
ச. மார்க்கண்டேய சர்மா தம்பதிகள்,
ச. வைத்தீஸ்வரசர்மா தம்பதிகள்.

(53889)

தென்னங்காணி சொந்தக்காரருக்கான

# விசேட கூட்டம்

பளைப் பிரதேசத்தில் உள்ள வடமாகாண தென்னை வளர்ப்போர் சங்கத் தலைவரினால் தென்னங்காணி உரிமையாளர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 10—03—98 அன்று சங்க மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் ஆனையிறவு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தென்னங்காணி உரிமையாளர்களும் தவறாது பங்குபற்றுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

தலைவர்,
தென்னை வளர்ப்போர் சங்கம்,
கண்டி வீதி, பளை.
(53890)

# JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

MARUTHANAMADAM,
CHUNNAKAM.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

DIPLOMA IN AGRICULTURE

## விவசாய டிப்ளோமா பயிற்சிநெறி

ஒரு வருடகால சாதனா, போதனா பயிற்சிநெறிக்கு க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த 17—25 வயதுக்கிடைப்பட்ட, சுய தொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பை தேடிக் கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


இக் கற்கை நெறியில் விவசாய மூலதத்துவம், பயிரியல் மிருக பரிபாலனம். பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்.

இப்பயிற்சிநெறிக் காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 16—03—98 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரம், கிராம சேவகரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகிய சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:
அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
(53891)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 — 12 — 1942 | 12 — 03 — 1995 |

அமரர்

## குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், புன்னாலைக்கட்டுவன்சந்தி, லக்ஷ்மிபவான், கோண்டாவில் சந்தி, ஆரியபவான்.)

திதி: 08 - 03 - 98

எல்லோரையும் அன்புடன் நேசித்தீர்கள்
எல்லோருக்கும் உதவுவதில் முன்னின்றீர்கள்
துணையாக நின்று துணிவுதந்து வழிகாட்டி
பாசமுடன் எங்களுடன் வாழ்ந்தீர்கள்!
பாதியிலே எம்மை விட்டு பிரிந்ததேனோ
அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
(53893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒரு வழி விசாரணை!

கொழும்பு மருதானை ரயில் நிலையத்திற்கு முன்பாக வியாழக்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்பில் இதுவரை முப்பத்தெட்டு பேர் பலியாகி உள்ளனர். இவர்களில் மிக அனேகர் பொதுமக்கள்—வழிப்போக்கர்கள், பயணிகள்— ஆவர்.

மக்களுக்கும் அவர் தம் உடைமைகளுக்கும் நாசம் விளைவிக்கும் இத்தகைய வன்செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. இச்சம்பவத்துக்குயார்பொறுப்பாக அல்லது சூத்திரிகளாக இருப்பினும் அவர்களின் மனிதாபிமானம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

வழமை போலவே, மருதானைக் குண்டு வெடிப்பையும் விடுதலைப் புலிகளே நடத்தியுள்ளனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டு விரலை நீட்டியிருக்கின்றார்கள். பொலீஸாரின் — படையினரின் — விசாரணை யாவும் விடுதலைப்புலிகளே இத்தாக்குதலை நடத்தினார்கள் என்ற முன் முடிவுடனேயே முடுக்கி விடப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகள் தவிர்ந்த வேறு தென்னிலங்கை வன்செயலாளர்கள் இச்சம்பவத்தின் சூத்திரதாரிகளாக இருக்க முடியாதா என்றதுளியளவு சந்தேகமும் பொலீஸாருக்கு ஏற்படாமலே, ஒரு வழி விசாரணை நடத்துவது பொருத்தமானதா?

ஜனநாயக விரோதமான மற்றும் வன் செயல்கள் தெற்கில் பெருகி வருவதாகக் குற்றஞ்சாட்டியே ஐக்கிய தேசியக்கட்சிநாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகிறது. எப்பாவலவில் தமது ஆதரவாளர்களின் வாகனங்கள் தாக்கப்பட்டதாகவும் ஐ. தே. கவினர் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் — ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளுக்கிடையே முறுகல்களும் மோதல்களும் உண்டாகியிருக்கும் பின்னணியில் — தென்னிலங்கையின் வன்செயல் சக்திகள் குண்டு வெடிப்பில் ஈடுபட்டிருக்க முடியாது என்ற துப்புச் சந்தேகம் தானும் பொலீஸாருக்கு வராதிருப்பது விந்தையானதாகும். அந்த வழியிலும் விசாரணைகளை நடத்திப் பார்க்கலாம் அல்லவா?

கொழும்பு நகருக்கென விசேட பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்குகிறோம் என்று கூறும் பாதுகாப்புப் பிரிவினர், தங்கள் பலவீனத்தை மறைத்து விடுவதற்காக, விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவி விட்டார்கள் என்றும் பத்திரிகைகளுக்குத் தகவல் தெரிவித்துப் பிரசித்தப்படுத்தவும்தவறுவதில்லை.

வடக்கு—கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட போரின் அழிவுக் கூறு இப்போது நாட்டின் சகல பகுதிகளுக்கும் பரவிவிட்டது. கொழும்பையே பாதுகாக்க முடியாமல் இருக்கும் படையினர், எல்லாப் பகுதிகளையும் எவ்வாறு பாதுகாப்பது?

எனவே போரைத் தொடர்வோம்; வெற்றி காண்போம்; என்று காலத்தையும் கழித்து, நாட்டையும் அழிக்காமல் அரசு போரை நிறுத்தவேண்டும். அந்த அணுகுமுறைக்கு உடனடியாக மாறவேண்டும்.

# பெண்கள் உரிமை குறித்து விழிப்புணர்ச்சி; எனினும் சமூகத்தின் புரிந்துணர்வு தேவை

மார்ச் மாதம் எட்டாம் திகதி கடந்த 22 வருடங்களாக சர்வதேச ரீதியாக மகளிர் தினமாகக் கருதப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. பெண் இனத்தின் அல்லல்கள் போக்கும் நோக்குடனும், ஆணாதிக்க அடக்குமுறைகளில் இருந்து விடுதலை அளிக்கும் முகமாகவும் பல சிந்தனையாளர்கள் எடுத்த முயற்சிகள் சர்வதேச மட்டத்தில் கொண்ட அக்கறையின் விளைவாக 1975 ஆம் ஆண்டில் மெக்சிக்கோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் சர்வதேச மகளிர் தசாப்தம் பிரகடனம் செய்யப்பட்டது. இம் மாநாட்டில் 133 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். இம் மாநாட்டில் இலங்கையும் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

இம் மாநாட்டில் பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டமும், பெண்கள் சமத்துவத்திற்கான பிரகடனமும் பெண்கள் பிரச்சினைகள் தொடர்பான 34 சிபார்சுகளும் மேற்கொள்ளப்பட்டன. பத்து ஆண்டுகளுக்குள் [1985 க்கு முன்] பெண்கள் கல்வியில் முன்னேற்றம், வேலை வாய்ப்பு, கிராமங்கள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் சேவை வசதி யோசனை, குடும்பத் திட்டம், சுகாதாரக் கல்வி வசதிகள் உட்பட பல விடயங்களில் முன்னேற்றம் காண வேண்டுமென நாடுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

மெக்சிக்கோ பிரகடனம் 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 முதல் 26 ஆம் திகதிகளில் நைரோபியில் மாநாடு கூட்டி மதிப்பீடு செய்யப்பட்டது. இம் மாநாட்டில் பெண்கள் சமத்துவம், அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன. மெக்சிக்கோ பிரகடனத்துக்கும் நைரோபி மாநாட்டிற்கும் இடைப்பட்ட பத்து வருடங்களில் பெண்கள் முன்னேற்றம் சார்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் எதிர்பார்த்தளவு முன்னேற்றம் காணப்படவில்லை.

திருமதி
பரமேஸ்வரி பரமநாதன்

பெண்கள் மீதான இம்சைகள், போசாக்கின்மை. பெண்ணுக்கு சம அந்தஸ்தின்மை, பெண் மதிக்கப்படாமை, சீதனக்கொடுமை போன்றவை தொடர்ந்தும் காணப்படுகின்றன; இன்றும் இவை காணப்படுகின்றன.

இலங்கையும் இம்மாநாட்டில் பங்குற்றியதால் எமது நாடு பெண்கள் பிரச்சினைகளில் அக்கறையும் நாட்டமும் கொண்டதை அறிய முடிகிறது. அதனைத் தொடர்ந்து இலங்கை அரசு மகளிர் விவகாரங்களில் அக்கறை காட்டி செயல் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இலங்கையில் 1978–ம் ஆண்டில் பெண்கள் பணியகம் ஆரம்பிக்கப்பட்டது. இப் பணியகம் பெண்கள் நலன்களைப் பாதுகாத்தும், பெண்கள் முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டும் இயங்கி வருகின்றது.

### திருப்திகரமானதா?

உலகளாவிய ரீதியில் பெண்கள் உரிமைகள், பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. பல துறைகளில் பெண்கள் முன்னேற்றமும் கண்டுள்ளனர். எனினும் பெண்களின் உரிமைகள் திருப்திகரமாகவுள்ளன எனக்கூறமுடியாது. இன்னும் பல நாடுகளில் பெண்கள், ஆண் ஆதிக்கத்தின் கீழ் இன்னல்களை அனுபவித்து வருவதை அறியக் கூடியதாக இருக்கின்றது. பெண்கள் பல சமூகங்களில் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் யோசனையில் மிகவும் பாதிக்கப்பட்டும், குடும்ப விவகாரங்களில் தீர்மானங்கள் எடுப்பதில் உரிமை அற்றவர்களாகவும் உள்ளனர்.

குடும்பத்தின்அச்சாணியாக இயங்கும் பெண், குடும்பச் சுமை தாங்க முடியாமல் திண்டாடுகின்ற நிலை. பிள்ளைகளைப் பெற்று, பாலூட்டி, சீராட்டி வளர்க்கும் பொறுப்பு மட்டும் அவளுடையன அல்ல, அவள் கணவனுக்குப் பணிசெய்தல், வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குதல், விருந்தினரை உபசரித்தல், வளர்ந்து வரும் பிள்ளைகளைக் கவனித்தல் போன்ற கடமைகளையும் ஆற்ற வேண்டியுள்ளது.

அவளுக்காக உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரவம்கொடுக்கும் கணவன்மார் எத்தனை குடும்பங்களில்? பகல் முழுவதும் வீட்டுப் பணி செய்தவள் மது போதையில் வந்து தொல்லை கொடுக்கும் கணவன்மாரினால்படும் வேதனை சொல்லி முடியாது.

**இன்று சர்வதேச மகளிர் தினம்**

வருமானத்தைப் பெருக்கும் பணியிலும் பெண்கள்இப்போது பெரும் அளவில் நிலைகொள்கின்றனர். ஆனால் குடும்பத்தைத் திட்டமிட்டு அளவான, மகிழ்ச்சியான குடும்பமாக்கவும் அநேகமான குடும்பங்களில் பெண்களுக்கு உரிமை கிடையாது!

இந் நிலைமைகள் மாற சுகாதார அமைச்சு, மகளிர் விவகார அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள் பல முயற்சிகள் எடுத்து வருகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் சுகாதார அமைச்சு தாய்—சேய் நலன் பேணுவதற்கு மிகவும் அக்கறையுடன் செயற்படுகிறது. யுனிசெவ் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் தாய்—சேய் நலன் பேணும் நடவடிக்கைகளில் பெரிதும் அக்கறை கொண்டு இலங்கை அரசுடன் சேர்ந்து செயற்படுகின்றன. சேவை வசதிகள் மேலும் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் பெண்களின் கல்வி, தொழில் வாய்ப்புக்களில் முன்னேற்றத்தைக் காண முடிகிறது.

பெண்களின் உரிமைகள், வசதிகள் குறித்து சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் ஆண்களிடம் விழிப்புணர்ச்சியும், புரிந்துணர்வும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் தேவை. குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து திட்டமிட்டு தீர்மானங்களை எடுத்து ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன் மதிப்புக் கொடுத்து வாழ்தல் மேலும் பெண்கள் நலன் பேண வழி வகுக்கும். பெண்களும் தன்னம்பிக்கையுடன் உரிய முறையில் தமது முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும்.

எனவே பெண்கள் தினத்தைக் கொண்டாடும் இந் நாளில் பெண்களின் உரிமைகள் பல சமூகங்களில் ஏட்டிலும் எழுத்திலும் மட்டும் வழங்குவதை மாற்றி செயலிலும் பூரணவழங்கப்பட வேண்டும். அதற்கு முழுச் சமூகமும் பரந்தளவில் விழித்தெழ வேண்டும்; புரிந்துணர்வு வளர வேண்டும்.

# எம்மையும் சமுதாயத்தையும் புதுப்பிக்கும் பணி நமதே

''புதுப்பித்தல்'' இன்று எமக்குப் புதிதல்ல இடம் பெயர்ந்து மீண்டும் எமது இடத்துக்கு, இல்லத்துக்கு வந்த நாம் அனைத்தையும் புதுப்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இடிந்து, சிதைந்து, அறுந்து, கழன்று கிடக்கும் வீட்டை, வேலியை மின், கம்பிகளை நாம் மீண்டும் புதுப்பித்து ஓரளவாவது பார்வைக்கு ஏற்றவாறு அமைப்பதே இன்றைய வேலையாகின்றது. துளைக்கப்பட்ட சுவர்கள், கழற்றப்பட்ட ஓடுகள், சீற்றுகள் கதவுகள், திருகி எடுக்கப்பட்ட கதவுப்பிடிகள், பூட்டுகள், இவை யாவற்றையும் சிறிது சிறிதாகப் புதுப்பித்தலில் நாள்கள் கழிகின்றன. பூண்டுப் பற்றையுமான வளவுகள் அழகான தோற்றம் பெறுகின்றன.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கமும் திருச்சபையின் புதுப்பித்தலையே மையமாகக் கொண்டு கூட்டப்பட்டது. ''தன்னைப் புதுப்பித்துப் பகிரும் திருச்சபையை நோக்கி'' ...என்பதை யாழ். மறைவட்ட மேய்ப்புப்பணி மாநாடும் தனது பொருளாகக் கொண்டது.

யூபிலி ஆண்டான இரண்டாம் கட்டமான இவ்வருடம் தூய ஆவியின் ஆண்டு புதுப்பித்துப் புனிதப்படுத்தும் ஆண்டு என்று கூறித் திருச்சபை நம்மை மனமாற்றத்திற்கு அழைக்கின்றாள். உள்ளும் புறமும் உற்று நோக்கி உடைவுகளையும், சிதைவுகளையும் சீர் செய்ய வேண்டிய புதிய பார்வையை நாம் ஏற்றுக்கொள்ள அழைப்பு விடுகின்றது. என்னையும், சமுதாயத்தையும் கட்டுவதற்கு அழைப்பு விடுகின்றது. இறை ஆவியின் குரலை உள்ளத்தில் கேட்கவும் கேட்கப்படும் குரலுக்கு பதில் கொடுக்கவும் இவ்வாண்டு எமக்குச் சவால் விடுக்கின்றது.

எம்மை மட்டுமல்ல, எமது சமுதாயத்தையும் புதுப்பிக்க வேண்டியது எமது கடன், எமது சமுதாயம் இன்று நம்பிக்கையற்ற நிலை, அநாதைகள் கைவிடப்பட்டோர் அதிகரிப்பு, உளவளத் துணையை நாடுவோர், வன்செயலுடன் கூடிய துவக்குச் சமூகம், மனித மதிப்பின்மை, அங்கவீனர்கள், கல்வியை இழந்து அதனை மீண்டும் பெறத் துடிக்கும் மாணவ சமூகம், எத்தகைய இழப்புக்களிலும், இறப்புக்களிலும் நாம் சாதாரணமாக வாழ்ந்த வாழ்வையே மற்றவனைப் பற்றிய எவ்வித அக்கறையுமின்றி வாழும் மனித கூட்டம், தமது ஓய்வு நேரத்தை தம்மை வளம்படுத்தவும், அறிவைப்பெருக்கவும் கூடிய வகையில் அமைக்காது காலம் கழிக்கும் சமூகம், உளநெருக்கடிக் கோளாறுகளால் பாதிப்படைந்தோர் போன்றோரினால் நிரம்பியுள்ளது.

> **உதயவாக்கு**
>
> நற்செயல் என்ற விளை நிலத்தைச்சீர்படுத்து. இதில் இறைவன் திருநாமம் என்ற விதையைத் தூவு.
>
> – குருநானக்.

தேவைகளோ ஆயிரம். தேவைகளுக்கான நிவாரணம் எதுவென்று தேடுவதற்கு நாம் தனித்தல்ல ஏனைய சிந்தனையாளர், நலன் விரும்பிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றோருடன் இணைந்து செயற்பட வேண்டும். தேவைகள் உள்ள இடங்களில் எமது பார்வையைச் செலுத்தி, நுணுக்கமாக இத்தேவைகளுககான நிவாரணத்தை அந்தந்த இடங்களில் அத்தேவைகளை நிறைவேற்றத் துடிப்போருடன் கலந்துரையாடிச் செயற்படுத்தவேண்டும் எதற்கும் மேலாக எம் உள்ளத்தில் இருக்கும் ஆவியின் குரலுக்கு எம்மை அர்ப்பணிப்புடன் கையளிப்பதாலும், செய்ய முடிந்தவற்றை காலம் தாழ்த்தாது செயலாக்கம் பெற முடிவு செய்தாலும் தேவைகளை ஓரளவு குறைக்கலாம்.

சாதாரணமாக நாம்தேவைகளைக் காண்பதிலும், அவற்றைப்பற்றிப் பேசி நேரம் செலவிடுவதிலும் விரயம் செய்கின்றோம் அதற்கான கஷ்டங்களை, துன்பங்களை, இடர்களை எதிர்நோக்கப் பயப்படுகிறோம். இதன் முடிவு என்னவாகும் என்பதைச் சிந்திப்பதில் ஒரு நம்பிக்கையற்ற நிலைக்கு எம்மைத் தள்ளுவதனால்எதனையும் முன்னேற்றமாகச் செய்ய முடியாமல் வருந்துகின்றோம்.

பத்திரிகைகளிலும், அறிக்கைகளிலும் எழுதும்அளவுக்கு நாம் செயற்படுகிறோம் என்றுசொல்லிவிட முடியாது. அறிக்கைகளில் இருப்பவை எந்த அளவுக்கு அமுலாக்கம் பெற்றன. என்று மீளாய்வு செய்து இம்மீளாய்வு எம்மையே நாம் சாந்தி செய்து சரிப்படுத்தாத அளவுக்கு அமையுமாறு நாம் தனித்தல்ல இன்னும் பலரையும் இணைத்து இப்பணியைச் செய்யவேண்டும்.

### தவக்காலச் சிந்தனை 12 ஆம் நாள்

ஏழைகள், அனாதைகள், பாதிப்புற்றோர், குரல் கொடுக்கமுடியாத நிலைகளில் உள்ளோரின் ஏக்கத்தில் இறைகுரலைத் தேட வேண்டும். எமது பணிகளைப் படித்தவர்கள், பணமுடையோர், அதிகாரமுடையோர் கூடித் தீட்டும் திட்டங்களில் அல்லவே– மற்குறிப்பிடப்பட்டவர்களின் தேவைகளை அந்தந்த இடம், சூழல், அதற்கான காரணங்களுடன்

(9 ஆம் பக்கம் பார்க்க)

> **நாளை**
>
> மாசி 25
>
> திங்கட்கிழமை
>
> திதி: துவாதசி
> காலை 6. 07 வரை
>
> நட்சத்திரம்: பூசம்
> பின் இரவு: 12–51 வரை
>
> சுபநேரம்: 12. 24 – 1. 54
> ராகு காலம்:7. 54 – 9. 24
>
> (இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவனையாளரின் கவனத்துக்கு!

தற்பொழுது கம்பனி விலையில் எல்லாவகையான சிகரெட்டுகளும் எல்லா விற்பனையாளரிடம் பாவனையாளர் பெறலாம்.

| விலைப் பட்டியல் | | பக்கட் | தனி சிகறட் |
|---|---|---|---|
| Bristol | 20s | 80/- | 4/- |
| Matterhorn | | 54/- | 4/50 |
| Gold Leaf | 12s | 54/- | 4/50 |
| Gold Leaf - Light | 20s | 90/- | 4/50 |
| Gold Leaf | 20s | 90/- | 4/50 |
| Benson and Hedges | 20s | 105/- | 5/25 |

Distributors for:

Ceylon Tobacco Co. Ltd.

**MURUGAN STORES**

388, Hospital Street,
Jaffna.

(53766)


## ஈசன்

கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

துரித வினாவிடை மீட்டல் வகுப்புக்கள்
நாடகமும் அரங்கியலும்
திரு. சத்தியா
ஆரம்பம்: 09 - 03 - 98
(திங்கள்) 4-00 P M.

(53910)

## வணிகர் சம்மேளனம்

யாழ். மாவட்டம்

### அங்குரார்ப்பணகூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

பேரன்புடையீர்!

**1998 - 03 - 08** காலை 10 மணிக்கு யாழ்ப்பாண செயலக மண்டபத்தில் வணிகர் சம்மேளனம் திரு. க. சன்முகநாதன் (அரச அதிபர்) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

ஆகவே தயவு செய்து யாழ். மாவட்டத்துக்குள் இயங்கும் அனைத்து வர்த்தக சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு நிர்வாகிகள் தெரிவில் இடம் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– அமைப்பாளர்கள்

(53872)

பழைய மாணவர் சங்கம்

## யா/விக்கினேஸ்வராக் கல்லூரி,

கரவெட்டி.

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

கரவை விக்கினேஸ்வரா பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் **1998 - 03 - 22** (ஞாயிறு) மு. ப. **09. 30** மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். எனவே பின்வரும் விடயங்களை பழைய மாணவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

1. பிரேரணைகள் இருப்பின் **14 - 03 - 1998** -க்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.
2. புதிதாகஅங்கத்தவர்களாகச் சேர்பவர்கள் அன்றி, அங்கத்துவத்தைப் புதுப்பிப்பவர்கள் **22 - 03 - 98** -க்கு முன்னர் பொருளாளருடன் தொடர்பு கொள்ளவும்.
3. அன்றைய தினம் 95 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக புகு மாணவருக்குரிய புலமைப்பரிசில் வழங்கப்படும்.
4. அனைவரினதும் வருகை தவறாது வேண்டப்படுகின்றது.

நன்றி!

க. தணிகாசலம்
தலைவர்

கி. ரவிகுமார்
செயலாளர்

(சி/3045)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 1995 / 96

பின்வரும் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள் ள மக்கள் வங்கிக்கிளையில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான கால அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளன.

கலைப் பீடம் -
1992 / 93, 1993 / 94, 1994 / 95, 1995 / 96 பிரிவுகள்

விஞ்ஞான பீடம் -
1993 / 94, 1994 / 95 பிரிவுகள்

விவசாய பீடம் -
1993 / 94, 1994 / 95, 1995 / 96 பிரிவுகள்

மருத்துவ பீடம் -
1994 / 95 பிரிவு – நிதிப் பிரிவில் வழங்கப்படும்.

- பதிவாளர்

(சி-3067)

## புலமைப் பரிசில் - 1998

பயிற்சிப் பரீட்சை 14 இல் அதிகூடிய புள்ளி பெற்ற மாணவர்கள்

★ சந்திரமோகன் விக்னேஷ் — 183 புள்ளி
(யா/சண்முகநாதன் வித்தியாலயம்)

★ நவரத்தினம் நவராஜகுமரன் — 171 புள்ளி
(யா/இந்து ஆரம்ப பாடசாலை)

★ கதிரவேல் பூர்ணிமா — 165 புள்ளி
(யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்)

★ கலைநாதன் பிரணரூபன் — 159 புள்ளி
(யா/இந்து ஆரம்ப பாடசாலை)

★ குமாரசாமி சாளினி — 156 புள்ளி
(யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன்)

அடுத்த 15 ஆவது பரீட்சை - 08 - 03 - 98
[ஞாயிறு 8 மணி முதல்]

**நாவலர் கல்வி நிலையம்**

நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(53870)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**குமாரவேலு பரராஜசேகரம்**

(B. A.)

(இளைஞர்சேவை அதிகாரி, சாவகச்சேரி.)

தங்களின் ஆத்ம சாந்திக்காக
என்றும் பிரார்த்திக்கும்
அன்பு நெஞ்சங்கள்:
உதவி இயக்குநரும்,
சக உத்தியோகத்தர்களும்.

மாவட்டக்காரியாலயம்,
தே. இ. சே. மன்றம்,
யாழ்ப்பாணம்.

(56895)

உ
சிவமயம்

## ருதுசோபன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுரவருஷம் மாசி மாதம் 25 ஆம் நாள் (09-03-98) திங்கட்கிழமை பகல் 10-26 மணி முதல் 12-09 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது ஏக புத்திரி
திருநிறைசெல்வி **சுதர்சினி**
அவர்களுக்கு

தற்காலிக முகவரி நல்லூர் வட கிழக்கு வீதியில் அமைந்துள்ள எமது இல்லத்தில் ருதுசோபனம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திருமதி நாகேந்திர சர்மா,
மனோண்மணி அம்மா,
நா. திவாகர சர்மா,
ஜெயப்பிரபா தம்பதிகள்.

மாறாம்புலம், அல்வாய்.

(53912)


## கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!

வெள்ளவத்தையில் மிகவும் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஸ்தாபனம்:

### ஹோட்டல் சீவம்ஸ் பிறைவேட் லிமிட்டெட்

என்பதை உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குளியல் அறைகளுடன் கூடிய தனி அறைகள் இருவர் தங்கும் அறைகள் சகாயமான நாள் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**HOTEL SEVAMS (PVT.) LTD.,**

391/6, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO - 06. T. P. No, 591590

(53905)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்,

## மேலும் இருவரை பூரான் கடித்தது

நெல்லியடி, மார்ச் 8

வடமராட்சிப் பகுதியில் நேற்று அதிகாலை மேலும் இருவர் வெள்ளைப் பூரானால் கடியுண்டனர்.

துன்னாலை மத்தியைச் சேர்ந்த சிவராசா வீரகுமாரி (வயது 47) என்னும் குடும்பப் பெண்ணும்—

அல்வாய் கிழக்கு முத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த தங்கவடிவேல் மகாராணி (வயது 28) என்பவருமே—வெள்ளைப்பூரானால் கடியுண்ட நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-109)

## சந்திப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 8

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேயர் யாழ். மாநகர மேயராகப் பதவி ஏற்கவுள்ள திருமதி ச. யோகேஸ்வரனைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

யாழ். நிலைவரங்கள்மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இச்சந்திப்பின்போது இருவரும் கலந்துரையாடினார்கள்.

யாழ். அரசாங்க அதிபர் ஊடாக யாழ். நகர் அபிவிருத்திக்கு உதவுவதாக பீற்றர் மேயர் தெரிவித்தார்,

(இ-5)

# நோயுற்றகறவைப்பசுஒன்று இறைச்சியாக வரும்கவனம்!

யாழ்ப்பாணம், மார்ச் 8

நீங்கள் மாட்டிறைச்சி சாப்பிடும் வழக்கமுள்ளவரா?

கவனம்! நோயுற்ற கறவை மாட்டின் இறைச்சியை வாங்கும் துரதிர்ஷ்டசாலிகளாக மாறி விடாதீர்கள்!

யாழ். நகருக்குச் சமீபமாகவுள்ள கிராமம் ஒன்றில் விலை மதிப்புள்ள கறவை மாடு ஒன்று கடந்த சனிக்கிழமை (பெப்.28) கன்று ஈனுவதற்காக நிலத்தில் படுத்த பின்னர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வரை எழுந்திருக்கவேயில்லை. கன்றை மட்டும் ஈன்றது. கன்று சுகமாகவே உள்ளது.

பசுவின் சொந்தக்காரர் மூன்று நான்கு வைத்தியர்களைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினார். அவர்களும் மாறி மாறி ஊசி மருந்தும் ஏற்றிப் பார்த்தார்கள். மாடு எழும்பவேயில்லை.

தரகர் ஒருவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பசுவை அதன் சொந்தக்காரரிடமிருந்துஇறைச்சி விற்பவருக்கு விலைக்கு வாங்கிக்கொடுத்தார்!

வெள்ளிக்கிழமை மாலையில் மைம்மல் பொழுதில் ''லாண்ட் மாஸ்டரில்'' மிகக் கஷ்டப்பட்டு தூக்கி பசு ஏற்றிச் செல்லப்பட்டது.

அந்தக் கோமாதா குடாநாட்டின் எந்தப் பகுதியில் இறைச்சியாக மாறுமோ? மாறியிருக்குமோ? அதனைச் சாப்பிட நேர்ந்தவர் என்ன நோய்க்கு ஆளாகிறாரோ? என்பது தான் ஆபத்தான விடயம்.

நோயுற்ற மாட்டின் இறைச்சி நல்ல இறைச்சி என்ற பெயரில் 'சீல்' குத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சைவ மக்கள் பரவி வாழும் குடாநாட்டில் கோமாதா — அதுவும் கன்று ஈன்ற நோயுற்ற கறவைப் பசு — இறைச்சிக்கு வெட்டப்படும் நிலை!

அதனைச் சாப்பிடுவோர் நோய்க்கு ஆளாகும் ஆபத்து! தட்டிக்கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் என்ற நிலை தானே......!?

(அ)

## பரீட்சை நிலையம் இங்கும்

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் நடத்தப்படும் பொதுக்கலை மாணிப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் ஒன்று யாழ். பல்கலைக் கழகத்திலும் அமையவுள்ளது.

தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாகவும், போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகவும் இப்பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துமாறு மாணவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பரீட்சைகள் தொடர்பான ஏற்பாடுகளுக்காகப் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் வே. தில்லைநாதன் அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது

(இ-9)

## நிவாரணம்

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம் கடந்த மாதத்துக்கான நிவாரணப் பொருள்களை வழங்கவில்லை என பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-111)

# படையினர்வசமுள்ள ஹோட்டல்களில் ஒன்றையாவது விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம். மார்ச். 8

படையினர் வசமிருக்கும் யாழ். நகரிலுள்ள மூன்று ஹோட்டல்களில் ஏதாவது ஒன்றை விடுவித்து யாழ்ப்பாணம் வருகைதரும் வெளிநாட்டினர் தங்கிச் செல்வதற்கு உதவுமாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள்குழு யாழ். சிவில் நிர்வாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு மற்றும் வெளியிடங்களில் இருந்து யாழ். நகர்வரும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிகள் இங்கு தங்கியிருந்து தமது பணிகளைச் செய்வதற்கு ஹோட்டல் வசதிகள் இல்லாத காரணத்தினால் வந்த உடனேயே திரும்பி விடுகின்றார்கள்.

இதனால் அவர்களின் வேலைத்திட்டங்கள் பூர்த்தியாக முடியாத நிலைமை ஏற்படுகிறது.

யாழ். நகரிலுள்ளஅசோக், சுபாஸ், ஞானம்ஸ் ஆகிய மூன்று ஹோட்டல்களும் படையினர் வசம் உள்ளன எனவே இந்த ஹோட்டல்களில் ஒன்றையாவது விடுவித்து யாழ் வரும் வெளிநாட்டினர் தங்கிச் செல்வதற்கு உதவுமாறு மேற்படி குழுவினர் கோரியுள்ளனர்.

## யாழ். திறந்தவெளி அரங்கு புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ். நகர திறந்தவெளி அரங்கு புனரமைக்கும் பணி ஆரம்பமாகவிருக்கிறது.

கடந்த கால வன்செயல் சம்பவங்களின் போது சேதமடைந்த இந்த அரங்கை புனரமைத்து கலை நிகழ்வுகளை நடத்த முடிவாகியுள்ளது.

இந்த அரங்கை புனரமைக்க முதல் கட்டமாக 2 லட்சம் ரூபாவை வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை வழங்கியுள்ளது,

சமய விவகார, கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியுடன் யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் பேச்சு நடத்தியதையடுத்தே இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரங்கைச் சுற்றியுள்ள பற்றைகள் வெட்டப்பட்டு, அழகுற அரங்கு புனரமைக்கப்படவிருக்கிறது. (இ-3)

## பனம் விதைக்கு குறிவைத்த கத்தி சிறுமியின் விரலைத் துண்டித்தது!

யாழ்ப்பாணம், மார்ச் 8

''பூரான்'' எடுப்பதற்காக பனம் விதைக்கு குறிவைத்து வெட்டிய கத்தி தவறி கைவிரல்களைத் துண்டாடியது.

வல்வெட்டித்துறையில் சமரபாகு என்ற இடத்தில் இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வ ஜோதி நளினி (வயது 9) என்ற சிறுமியே கத்திவெட்டுக்கிலக்காகிக் காயமடைந்தார்.

காயமடைந்தவரின் சகோதரன் (12 வயது) ஒரு மரக் குற்றியில் பனம் விதையை வைத்து வெட்டியபோதே, அக்குற்றியைப் பிடித்திருந்த, தங்கையின் கையில் கத்தி குறி தவறி விழுந்து இரண்டு விரல்கள் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-15)

## கூட்டுறவுச் சங்க சமாசம் வெங்காயம் கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்ப்பாண விவசாயிகளின் நன்மைகருதி நாளை திங்கட்கிழமை தொடக்கம் விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க சமாசம் வெங்காயத்தைக் கொள்வனவு செய்யவுள்ளது.

கிலோ 22 ரூபா வீதம் விவசாயிகளிடமிருந்து வெங்காயம் கொள்வனவு செய்யப்படும். வலிகாமத்தில் நீர்வேலி ப. நோ. கூ. சங்கம் ஊடாகவும் வடமராட்சியில் அங்குள்ள ப. நோ. கூ. சங்கக் கிளைகள் ஊடாகவும் வெங்காயம் கொள்வனவு செய்யப்படும் என்று மேற்படி சமாசத்தின் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இங்கு கொள்வனவு செய்யப்படும் வெங்காயத்தை முதல்வரும் கப்பலில் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(இ-5)

## எம்மையும்...

(ஏழாம் பக்கத் தொடர்)

கூட்டிஇறைஒளியில் தேர்ந்து தெளிவதால் மட்டுமே கண்டறிய முடியும்.

சிறிய செயலாயினும் சிந்தனையுடன் கூடிச் செயற்படுவதிலேயே சித்திகிடைக்கும். எதற்கும்மேலாக எமது பணியை வேண்டுவோரின் மனப்பக்குவம் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்களை அவர்களுடன் கூடி ஆராய்வதாலும், அவர்கள் மனவிருப்பை அறிவதாலும், இறை வெளிப்பாட்டுடன் செயற்படுவதாலும் மட்டுமே பணியின் பலனைப் பெற முடியும்.

இன்றைய எம் சமுதாயத் தேவையை உணர்ந்து, உற்றுக்கேட்கும் தன்மையை— உள்ளூரப் பார்க்கும் தன்மையை எம்மில் வளர்ப்போமா? மற்றவனுக்கும் தெரியும் என்ற மனநிலையில் மனத்தாழ்ச்சியுடன் ஆலோசனை கேட்கவும், அமர்ந்து பேசவும், இறைஒளியில் தேர்ந்து தெளிந்து நோக்கி தீர்மானம் செய்யவும், செய்பவற்றைப் பாராட்டவும், பழகிக்கொள்வோமானால் சமுதாயத்தை நோக்கிய எமது மனமாற்றம் அதுவாகவே இருக்கும். ஆவி எம்மில் வேண்டி [illegible] அதுவே.

—அருட்செல்வி மேரிசோபியா
(தி. கு. மாகாணத்தலைவி)

## மெய்வல்லுநர் போட்டிகள்

சண்டிலிப்பாய் மார்ச் 8

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கல்லூரி அதிபர் செல்வி பொ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார். உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-135)

★ ★ ★

ஆவரங்கால் மகாஜனவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1. 30 மணி முதல் அதிபர் துரை எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது, பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்ட நிர்வாக அலுவலர் பூ. புலேந்திரராசா கலந்து கொள்வார்.

(ஐ – ரீ)

★ ★ ★

கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1. 30 மணி முதல் நடைபெறும். பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

(ஐ-51)

★ ★ ★

யாழ். வண் நாவலர் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9. 30 மணியளவில் அதிபர் ஐ. துரைராஜா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ். நல்லூர்க் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். அருளானந்தம் பிரதம விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த. அருணகிரிராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-7)

★ ★ ★

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு பிற்பகல் 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ. குணநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கல்வித் திணைக்கள பொறியியலாளர் க. ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொள்வார்.

இப்பாடசாலையுடன் சேர்ந்து இயங்கும் அச்செழு மெ. மி. த. க. பாடசாலை மாணவர்களும் இப்போட்டிகளில் பங்குபற்றுவர்.

(ஐ)

★ ★ ★

கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1. 00 மணியளவில் அதிபர் எஸ். ஆர். மகேந்திரன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் இ. கணேசன் பிரதம விருந்தினராகவும், தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(இ-7)


## முரசொலி சனசமூக நிலையம்

நவாலியூர்

★ மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று (08 – 03 – 98) பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

★ 09-03-98 இரவு நடைபெற இருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு எதிர்பாராத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

தலைவர்.

(53908)



## "இவரை"க் கண்டீர்களா?

ஆறு வயது நிரம்பிய டோபமன் இனத்தைச் சேர்ந்த வால் இல்லாத கறுப்பு, பிறவுண் நிறமுடைய (Dobermans — Black & Tan) நாயை 4 ஆம் திகதி முதல் காணவில்லை. 2½ அடி உயரமுடையது. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தந்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

என். இராஜதேவன்
ஏ. பவர் அன் கொம்பனி லிமிட்,
51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

(53918)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறைப்பாடுகளை தமிழில் பதிவதற்கு வசதி வேண்டும்

## சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 8

பொலிஸ் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகள் தமிழில் பதியப்பட வேண்டும் என்றும் — சட்டத்தரணிகளுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் — யாழ். மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகளும், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகளும் யாழ். சிவில் நிர்வாக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் படும் கஷ்டங்கள் குறித்து மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு யாழ். சிவில் நிர்வாக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார்.

யாழ். சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் திலகரத்னா நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்துக்கு நேரில் சென்று குறைகளைக் கேட்டறிந்தார்.

அப்பொழுதே மேற்கண்ட கோரிக்கைகள் விடப்பட்டன.

இந்தச் சந்திப்பின் போது சட்டத்தரணிகள் செல்லும் வாகனங்களுக்குத் தனியான அடையாளம் பொறிக்கப்பட்டு சோதனை நிலையங்களில் நிறுத்தி சோதனை செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

சுற்றிவளைப்புகள் தேடுதல் நடவடிக்கைகளின் போது நீதிமன்ற ஊழியர்களும் தடுத்துவைக்கப்படுவதால் கடமைக்குச் சமுகமளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் சிவில் நிர்வாக அதிகாரியிடம் கூறப்பட்டது.

குறைகளைக் கேட்டறிந்த பின் பிரிகேடியர் திலகரத்னா நீதிமன்றத்தில் ஒரு கலந்துரையாடலை நடத்தினார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் மல்லாகத்தில் நடத்தப்பட வேண்டும் என்றும் — யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதால் கஷ்டங்களுக்கு பலத்த அசௌகரியங்கள் ஏற்படுவதாக தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் — மல்லாகத்துக்குச் சமீபமாக சுன்னாகத்தில் இந்த நீதிமன்றத்தை இயங்கச் செய்ய வேண்டும் என்றும் — பிரிகேடியர் கேட்டுக் கொண்டார்.

பிரிகேடியரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் இயங்கும் மல்லாகம் நீதிமன்றத்தைச் சுன்னாகத்துக்கு மாற்றுவதெனவும் சட்டத்தரணிகள்சங்கமும் படையினரும் இணைந்து இதற்கான இடத்தைக் கண்டுபிடிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

நீதிமன்றங்களில் சட்டப் புத்தகங்கள் இல்லாமை மற்றும் தளபாட வசதிகள் இல்லாமை பற்றியும் பிரிகேடியரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

குறைபாடுகள் அனைத்தையும் குறித்துக் கொண்ட பிரிகேடியர் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (இ–5)

# தனித்திருந்தவர்களின் நகைகள் அபகரிப்பு

## அல்வாய் வடக்கில் சம்பவம்

அதிகாலை வேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்தவர்களின் கழுத்திலிருந்த தாலிக் கொடியையும், சங்கிலியையும் அறுத்துக் கொண்டு தலை மறைவானார்கள்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் கடந்த புதன்கிழமை அதிகாலை 3 மணியளவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் வடக்கில் இடம் பெற்றது.

குடும்பத்தலைவன் கடற்றொழிலுக்குச் சென்ற சமயம் பார்த்து அங்கு உட்புகுந்த திருடர்களே, படுத்திருந்த நீற்றம்மா என்பவரின கழுத்திலிருந்த சுமார் ஐந்தரைப் பவுண் நிறையுடைய தாலிக் கொடியையும், இவரது குழந்தையின் கழுத்திலிருந்த ஒரு பவுண் நிறையுடைய சங்கிலியையும் அறுத்துக்கொண்டு தலை மறைவாகினர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஒருவரை பருத்தித்துறை பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எச். ஏ. தகம்பத் கைது செய்து மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

திருடப்பட்ட நகைகளின் பெறுமதி 45 ஆயிரம் ரூபா என பருத்தித்துறைப் பொலீஸார் தெரிவித்தனர். (இ–109)

# ஐ. தே. க. பகிஷ்கரிப்பு தொடரும் சாத்தியம்

அரசாங்கம் ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக்குற்றஞ்சாட்டி கடந்த மூன்றாம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வரும் ஐ. தே. க.வின் போராட்டம் ஒரு மாத காலத்துக்குப் பின்பும் நீடிக்கப்படலாம் என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எப்பாவிலவில் ஐ. தே.கட்சியினரின் கூட்டத்தில் பங்கு பற்றச் சென்றவர்களின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதைச் சுட்டிக் காட்டி இது போன்ற ஜனநாயக விரோதச் செயல்கள் அதிகரித்து வருவதை எதிர்த்து ஐ. தே. கட்சியினர் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. (இ–9)

# அனுமதியின்றி சாராயம் கொண்டு சென்றாராம்

நெல்லியடி, மார்ச் 8

அனுமதிப் பத்திரமின்றி பத்துப் போத்தல் சாராயத்தை பஸ்ஸில் கொண்டு சென்றதாகக் கூறப்படும் பெண் ஒருவருக்கு எதிராக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின் போது, பத்துப் போத்தல் சாராயத்தையும், அரச வடிசாலைக்குக் கொடுக்கும்படி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, கலால் பகுதிக்கு உத்தரவிட்டார்.

புலோலிப் பகுதியிலிருந்து இப்பெண் அதிகாலை வேளை 10 போத்தல் சாராயத்தை அனுமதிப் பத்திரமின்றி பஸ்ஸில் கொண்டு செல்கையில் வல்லைச் சந்தியில் பொலீஸாரின் சோதனையின் போது அகப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாராயப் போத்தல்களுடன் பிரஸ்தாபப் பெண்ணையும், நெல்லியடி பொலீஸார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்திய வேளை, நீதிவான் மேற்கண்ட உத்தரவை கலால் பகுதிக்கு வழங்கினார். (இ–109)

# கருத்தரங்கும் பட்டறையும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

சிறுவர்கள் நலன் தொடர்பான முழுநாள் கருத்தரங்கும் பட்டறை ஒன்றும் யாழ்ப்பாணத்திலும் விரைவில் நடைபெறவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் யாழ். அரச செயலகமும் இணைந்து நடத்தும் இந்தக் கருத்தரங்கு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் நடைபெறவுள்ளது.

தேசிய ரீதியில் சிறுவர் பாதுகாப்பு சாசனம் ஒன்றை தயாரிப்பது தொடர்பாகவே இக் கருத்தரங்கு நடத்தப்பட உள்ளது.

சிறுவர்களுக்கான பாதுகாப்பு சாசனம் உருவாக்குவது தொடர்பான முழுநாள் கருத்தரங்கும் பட்டறை ஒன்றும் அண்மையில் திருகோணமலையில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதில் அரச நிறுவனங்களின் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (இ–5)

# ஏறாவூர்பொலீஸ்நிலையம் புலிகளால்தாக்கப்பட்டதா?

மருதானையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பந்தமாக குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏறாவூர் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவித்தன.

மருதானைக் குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட வானின் சொந்தக்காரர் எனக் கண்டு பிடிக்கப்பட்டு சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் ஒருவரையும் ஆண் ஒருவரையும் மீட்பதற்காகவே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

சுமார் மூன்று மணிநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலை பொலீஸார் முறியடித்துவிட்டதாகவும் அச்செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய வானொலி, லண்டன் பி.பி.ஸி. தமிழோசை, ரி. என். எல். தொலைக்காட்சி ஆகியன இச் செய்தியை வெளியிட்ட போதும் அரச தரப்புச் செய்திகளோ, ‘புலிகளின் குரல்’ வானொலிச் செய்தியோ இச்சம்பவம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. எமது மட்டக்களப்பு செய்தியாளராலும் இது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. (இ–9–10)

# பராமரிப்பற்ற நிலையில் தொல் பொருள்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 8

யாழ்ப்பாணம் நூதனசாலையில் காலாகாலமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த தொல் பொருள்கள் சில பராமரிப்பற்று மழை, வெயிலில் கிடந்து அழிந்து போகும் நிலையில் உள்ளன.

இந்த நூதனசாலைகடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து புதியதோர் இடத்தில் இயங்கி வருகிறது.

இந்தஇடம்தொல்பொருள்களை உள்ளடக்கி வைத்துப் பாதுகாக்கக்கூடிய அளவுக்கு விஸ்தீரணமானது அல்ல.

பொருள்கள் சில உள்ளே வைக்க முடியாமல் வெளியே வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சுமார் 20 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட திமிங்கிலத்தின் எலும்புக்கூடும் ஒன்றாகும். (இ–15)

## தெலுங்குதேச...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த தேர்தலில் பாரதீய ஜனதாக்கட்சியையோ அல்லது காங்கிரஸ் கட்சியையோ நாம் எதிர்ப்போம் என்று மக்களிடம் கூறினோம்.

ஆனால் தற்போது மக்கள் இத்தகையதீர்ப்பைவழங்கியுள்ளார்கள்.

ஆகவே ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாம் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து யோசிக்கவேண்டியுள்ளது,

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ–7)

## இளாலிக்...

(முதலாம் பக்கத்தொடர்)

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(இ–7–9–164)

## மோதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாணம்) என்ற போராளி மரணமடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## அதிகாரிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

எனினும் விண்ணப்பித்த அனைவருக்கும் இணைப்புக்களை வழங்க ரெலிக்கொம் நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

தவறான வழியில் லஞ்சம் கொடுத்து இணைப்புக்களைப் பெற முயற்சி செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ–9)




தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
▶ போட்டோ பிரதிகள்
▶ லமினேட்டிங் (கவரிடுதல்)
நாடவேண்டிய இடம்:
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



சித்ராலயா

எமது கலர் ஆய்வு கூடத்தில் உங்களின் கலர்ப்படத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளுங்கள்.

பாஸ்போட்

(அவசரமாகத் தேவைப்படுவோர்க்கு ஒரு மணித்தியாலத்திலும் கொடுக்கப்படும்)

விசேட அடையாள அட்டை, போஸ்ற் காட்

இவற்றுடன்

▼ சகல அளவுகளிலும் படங்களைப் பெரிதாக்கிக் கொள்வதற்கும்
▼ கலர் படச்சுருள்களை டெவெலப்பிங், பிறின்ரிங்செய்து கொள்வதற்கும்
▼ தரமான திருமண அல்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நாடுங்கள்

சித்ராலயா
172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (53914)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08–03–1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org